DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No.1409/2025

Deposition of witness: LW1/PW1

| | | | |
|---|---|---|---|
| Name | பரணி | Taluk | |
| Father's Name | சக்திவேல் | Village | |
| Age | 27 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **14.07.2026.** | | | |

**(Accused 1, 2 and 4 present. A3 absent, U/s.317 PFA )**

சாட்சியை பண்ருட்டி காவல் நிலைய முதல் நிலை காவலர் திரு.K. பிரசாத் Gr-I 1724அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பண்ருட்டி, அம்பேத்கர் நகரில் வசித்து Vasanth and Coவில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். பட்டியல் சாட்சிகள் சக்திவேல், மாதவன் ஆகியோர்கள் முறையே எனது அப்பா, தம்பி ஆவார்கள். ஆஜர் எதிரிகளையும், ஆஜரில்லா எதிரியையும் தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் இரவு வேளையில் நான் எனது வீட்டில் இருந்தபோது, எங்கள் தெருவில் 10க்கும் மேற்பட்ட நபர்கள் கும்பலாக சண்டை போட்டுக்கொண்டிருந்த சத்தம் கேட்டு, நான் வெளியே சென்று பார்த்தபோது, கும்பலில் இருந்த யாரோ சிலர் என்னை அசிங்கமாக திட்டி, தாக்கிவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார்கள். மேற்படி கும்பலாக சண்டை போட்ட நபர்கள் யார் என்றும், என்னை அசிங்கமாக திட்டி, தாக்கிய நபர்கள் யார் என்றும், எதற்காக அவ்வாறு செய்தார்கள் என்றும் எனக்கு தெரியாது. மேற்படி காயம்பட்ட என்னை, எனது அப்பாவும், தம்பி மாதவனும் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். நான் மேற்படி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது பண்ருட்டி காவல் நிலைய போலிசார் என்னிடம் எழுதாத ஒரு வெள்ளை தாளில் கையொப்பம் வாங்கினார்கள். எதற்கு என்று எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம்தான் அது. **(மேற்படி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ1ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இதை தவிர எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எந்த விபரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

வழக்கின் எதிரிகளுடன் வழக்கு சம்மந்தமாக சமாதானம் ஆகிவிட்டேன் என்று சொன்னால் சரிதான். போலிசார் விசாரித்தார்கள் என்றும், போலிஸ்

விசாரணையில் எங்களுக்கும், புண்ணியக்கோடி என்பவருக்கும் இடப்பிரச்சனை சம்மந்தமாக என்னுடைய அம்மா அஞ்சலை அடித்தது சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்த நிலையில் கடந்த 02.06.2023 அன்று இரவு சுமார் 10.00 மணியளவில், என் வீட்டின் பக்கத்தில் உள்ள முருகன் கோவில் அருகே நான் நின்றுக்கொண்டிருந்தபோது, தமிழ்ச்செல்வன், முருகன், மணிகண்டன், எம்.ஜி.ஆர்(எ)வடிவுநாதன் ஆகியோர்கள் ஒன்று சேர்ந்து என்னைப் பார்த்து அசிங்கமாக திட்டினார்கள் என்றும், தமிழ்ச்செல்வன் எனது கழுத்தில் கையால் அடித்தார் என்றும், மற்ற மூவரும் என்னை காலால் எட்டி உதைத்து, கீழே தள்ளி கையால் எனது கழுத்து, முதுகு மற்றும் உடல் முழுவதும் அடித்தார்கள் என்றும், நான் வலி தாங்க முடியாமல் கத்தியதை கேட்டு, அங்கு வந்த என் அப்பாவும், எனது தம்பி மாதவனும் சண்டையை தடுத்தார்கள் என்றும், நான் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, அங்கு வந்த பண்ருட்டி காவல் நிலைய போலிசாரிடம், மேற்படி எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் வாக்குமூலம் அளித்தேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது வழக்கின் எதிரிகளுடன் வழக்கு சம்மந்தமாக சமாதானம் ஆகிவிட்டதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை– இல்லை.**

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No.1409/2025

Deposition of witness: LW3/PW2

| | | | |
|---|---|---|---|
| Name | மாதவன் | Taluk | |
| Father's Name | சக்திவேல் | Village | |
| Age | 24 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **14.07.2026.** | | | |

**(Accused 1, 2 and 4 present. A3 absent, U/s.317 PFA )**

சாட்சியை பண்ருட்டி காவல் நிலைய முதல் நிலை காவலர் திரு.K. பிரசாத் Gr–I 1724அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பண்ருட்டி, அம்பேத்கர் நகரில் வசித்து மொபைல் பழுதுநீக்கும் கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா–1 பரணி, பட்டியல் சாட்சி சக்திவேல் ஆகியோர்கள் முறையே எனது அண்ணன், அப்பா ஆவார்கள். ஆஜர் எதிரிகளையும், ஆஜரில்லா எதிரியையும் தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் இரவு வேளையில் மேற்சொன்ன எனது அண்ணன் பரணி எங்கள் வீட்டில் இருந்தபோது, எங்கள் தெருவில் 10க்கும் மேற்பட்ட நபர்கள் கும்பலாக சண்டை போட்டுக்கொண்டிருந்த சத்தம் கேட்டு, எனது அண்ணன் வெளியே சென்று பார்த்தபோது, கும்பலில் இருந்த யாரோ சிலர் எனது அண்ணனை அசிங்கமாக திட்டி, தாக்கிவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார்கள். மேற்படி கும்பலாக சண்டை போட்ட நபர்கள் யார் என்றும், எனது அண்ணனை அசிங்கமாக திட்டி, தாக்கிய நபர்கள் யார் என்றும், எதற்காக அவ்வாறு செய்தார்கள் என்றும் எனக்கு தெரியாது. மேற்படி காயம்பட்ட என் அண்ணனை, எனது அப்பாவும், நானும் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றோம். இதை தவிர எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எந்த விபரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

வழக்கின் எதிரிகளுடன் வழக்கு சம்மந்தமாக சமாதானம் ஆகிவிட்டேன் என்று சொன்னால் சரிதான். போலிசார் விசாரித்தார்கள் என்றும், போலிஸ் விசாரணையில் எங்களுக்கும், புண்ணியக்கோடி என்பவருக்கும் இடப்பிரச்சனை சம்மந்தமாக என்னுடைய அம்மா அஞ்சலை அடித்தது சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்த நிலையில் கடந்த 02.06.2023 அன்று இரவு சுமார் 10.00 மணியளவில், என் வீட்டின் பக்கத்தில் உள்ள முருகன் கோவில் அருகே

எனது அண்ணன் பரணி நின்றுக்கொண்டிருந்தபோது, தமிழ்ச்செல்வன், முருகன், மணிகண்டன், எம்.ஜி.ஆர்(எ)வடிவுநாதன் ஆகியோர்கள் ஒன்று சேர்ந்து என் அண்ணனைப் பார்த்து அசிங்கமாக திட்டினார்கள் என்றும், தமிழ்ச்செல்வன் எனது அண்ணன் கழுத்தில் கையால் அடித்தார் என்றும், மற்ற மூவரும் என் அண்ணனை காலால் எட்டி உதைத்து, கீழே தள்ளி கையால் எனது அண்ணன் கழுத்து, முதுகு மற்றும் உடல் முழுவதும் அடித்தார்கள் என்றும், எனது அண்ணன் வலி தாங்க முடியாமல் கத்தியதை கேட்டு, நானும், என் அப்பாவும், அங்கு சென்று சண்டையை தடுத்தோம் என்றும், எனது அண்ணன் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, அங்கு வந்த பண்ருட்டி காவல் நிலைய போலிசாரிடம், மேற்படி எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் வாக்குமூலம் அளித்தார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது வழக்கின் எதிரிகளுடன் வழக்கு சம்மந்தமாக சமாதானம் ஆகிவிட்டதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை– இல்லை.**